# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-101** **தேதி:-12.12.2011**

**BWA ஸ்பெக்ட்ரம் கட்டணங்கள் BSNLக்கு திருப்பி தரப்படுகிறது...**
**கூட்டு நடவடிக்கை குழு மற்றும் அதன் ஒன்றுபட்ட**
**போராட்டங்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி...**

அன்பார்ந்த தோழர்களே!

BSNL ஆல் திருப்பி ஒப்படைக்கப்பட்ட தேவையற்ற BWA ஸ்பெக்ட்ரத்திற்கான பணத்தை அரசாங்கம் திருப்பித் தர மத்திய அரசாங்கம் கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது. அதன் விவரங்கள் வருமாறு:-

கடந்த வருடம் தரமற்ற BWA ஸ்பெட்ரத்தை அனைத்து 21 தொலை தொடர்பு வட்டங்களுக்கும் BSNLக்கு தரப்பட்டது. தங்களுக்கு தேவையான மாநிலங்களை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை தனியார் நிறுவனங்களுக்கு மட்டும் வழங்கப் பட்டது. ஆனால் அந்த உரிமை BSNLக்கு மட்டும் மறுக்கப்பட்டது. பெரும்பாலான வட்டங்களில் இந்த ஸ்பெக்ட்ரத்தால் BSNLக்கு எந்த வித பயனும் இல்லை. எனவே BSNL நிறுவனம், மகாராஷ்டிரா, குஜராத், ஆந்திரா மற்றும் அரியானா ஆகிய வட்டங்களில் மட்டும் இந்த BWA ஸ்பெக்ட்ரத்தை வைத்துக் கொண்டு மீதமுள்ள 17 வட்டங்களுக்கான ஸ்பெக்ட்ரத்தை திரும்ப ஒப்படைத்து விட்டது. இவ்வாறு திரும்ப ஒப்படைத்ததனால் 7,000 கோடி ரூபாய் அளவிற்கு BSNLக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. ஆனாலும் இந்த பிரச்சனையில் எந்த ஒரு முடிவும் எடுக்காமல் அரசு இழுத்தடித்து வந்தது. எனவே கூட்டு நடவடிக்கைக் குழு இந்த பிரச்சனையை கையிலெடுத்து டிசம்பர் 15 வேலை நிறுத்தத்தின் ஒரு கோரிக்கையாக வைத்துள்ளது. தற்போது இந்த பணத்தை BSNLக்கு திருப்பி தருவது என அரசு முடிவெடுத்துள்ளதாக பத்திரிக்கை செய்திகள் மூலம் தெரிய வருகிறது. கூட்டு நடவடிக்கை குழு மற்றும் அதன் ஒன்று பட்ட போராடங்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி இது.

**தொழிலாளர் ஒற்றுமை ஓங்குக...**
**கூட்டு போராட்டங்கள் ஓங்குக...**

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**/S.செல்லப்பா/**
**மாநில செயலாளர்.**